BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# டவுண்டவுன் ப்ராம்ப்ட்டன் நகரில் கடைகள்/நிறுவனங்களில் இருந்து வாங்கப்படும் பொருட்கள் தடுப்புக்களின் ஓரமாக வைக்கப்பட்டு எடுத்துச்செல்லும் வசதிக்கு நகர நிர்வாகம் ஆதரவளிக்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஜூலை 30, 2020) – இந்த வாரத்தில் உள்ளூர் கடைகள் மற்றும் குடியிருப்பாளர்களுக்கு ஆதரவளிப்பதில் ஒரு உதவியாக, கடைகளில் இருந்து வாங்கப்படும் பொருட்களை தடுப்புக்களின் ஓரத்திலிருந்து எடுத்துச் செல்லக்கூடிய வகையில் வாகனங்கள் நிறுத்துவதற்கான பகுதிகளை நகரநிர்வாகம் அறிமுகம் செய்கிறது.

எல்லா வணிக நிறுவனங்களும் கோவிட் – 19 தொற்று பரவலின் தாக்கத்த்திற்கு தங்களை சரிப்படுத்திக்கொண்டபடியே, ஆன்லைனில் தங்கள் பொருட்களை விற்பனை செய்ய பழகிக்கொண்டனர்; வாடிக்கையாளர்கள் மற்றும் சமுதாயத்தினரின் உடல் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பினைக் காப்பதில் உதவும் வகையில் தடுப்புக்களின் ஓரத்தில் பொருட்களை வைப்பது மற்றும் வாசலில் இருந்தே எடுத்துச்செல்வது ஆகியவற்றுக்கு உற்சாகமளிக்கப்பட்டு வருகிறது.

டவுண்டவினில் வாகனம் நிறுத்தும் இடத்திற்கான தேவை அதிகரிப்பதை உணர்ந்து, டவுண்டவுன் வணிக மேம்பாட்டு சங்கத்துடனான (Downtown Brampton Business Improvement Association (BIA))கலந்தாலோசனையின் பேரில், ”சுமையேற்றும் பகுதிகள்” வசதி ஏற்படுத்த நகர நிர்வாகம் ஒப்புதல் அளித்துள்ளது; இதன் மூலம் போகிறபோக்கில் வாகனத்தை நிறுத்தி கடைகள்/நிறுவனங்களில் வைக்கப்படும் தடுப்பின் ஓரத்திலிருந்தே பொருட்களை சேகரித்துக்கொள்ளலாம் மற்றும் வணிகர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் குடியிருப்பு வாசிகளின் பாதுகாப்பினை போற்றிக்காக்க முடியும். இதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்த, தடுப்புகளின் ஓரமாக, 15 நிமிட கால அவகாசத்திற்கு வாகனத்தை எங்கு நிறுத்தலாம் என்பதற்கான அறிவிப்புப் பலகைகள் நட்டுவைக்கப்படும். இம்மாதிரியான அமைவிடங்களில் அடங்குபவை:

- 46 க்வீன் ஸ்ட்ரீட் ஈஸ்ட்
- 12 க்வீன் ஸ்ட்ரீட் ஈஸ்ட்
- மெயின் ஸ்ட்ரீட் நார்த் - கார்டன் ஸ்க்வேர்
- மெயின் ஸ்ட்ரீட் நார்த் – விவியன் லேன்
- 24 மெயின் ஸ்ட்ரீட் சவுத்
- 74 க்வீன் ஸ்ட்ரீட் வெஸ்ட்

கோவிட் -19 தொற்று பரவலுக்கு எதிரான பதில் நடவடிக்கைக்காலம் முழுதுமாக, உள்ளூர் வணிகங்கள் மீட்சியடைவதற்கு உதவி செய்யும் வகையிலான ஆதரவு நடவடிக்கைகளை நகர நிர்வாகம்அறிமுகம்

செய்தபடியேஇருந்தது; இதனால் அவர்கள் பாதுகாப்புடன் தங்கள் செயல்பாடுகளை மேற்கொள்வது உறுதி செய்யப்பட்டது:

- மே மாதம் 13 ஆம் தேதி, ஒரு பொருளாதார மீட்பு யுக்திக்கு ப்ராம்ப்ட்டன் நகரசபை, ஒப்புதல் வழங்கியது ; இது உள்ளூர் பொருளாதாரத்தை மறுதுவக்கம் செய்வதை முன்னெடுத்துச் செல்வதற்காக நகர நிர்வாகத்திற்கு ஒரு கட்டுக்கோப்பாக இருந்தது.
- மே மாதம் 20 ஆம் தேதி, "உள்ளூரை ஆதரிக்கவும்" எனும் பிரச்சாரத்தை ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் மேற்கொண்டது; இது குடியிருப்புவாசிகள் கடைகளுக்குச் செல்ல, உணவுண்ண, பரிசுகள் வழங்க மற்றும் உள்ளூர் மக்களை ஆதரிக்க ஊக்குவித்தது.
- மே மாதம் 29 ஆம் தேதி, ஷாப்ஹியர்(ShopHERE) எனும் திட்டத்தில் பங்கேற்பதாக அறிவித்த முதல் பல நகராட்சிகளில், ப்ராம்ப்ட்டன் நகராட்சியும் ஒன்றாகும்.
- ஜூன் மாதம் 24 ஆம் தேதி, நகர நிர்வாகம் தனது பேஷியோ ப்ராம்ப்ட்டன் (Patio Brampton) எனும் திட்டத்தை அறிவித்தது; இதன் மூலம் நகரில் இருக்கும் உணவகங்கள் மற்றும் மது பார்கள் தங்கள் வெளி முற்றங்களை விரிவு படுத்தி சமூக விலகலைக் கடைப்பிடிப்பதை ஏதுவாக்கியது.
- இந்த பேஷியோ ப்ராம்ப்ட்டன் திட்டமானது, பல குடியிருப்பு வாசிகளும் இந்தக் கோடைப்பருவத்தை மகிழ்ந்து அனுபவிக்கும் விதமாக வெளியில் செல்லவும், உள்ளூர் வணிகர்களுக்கு ஆதரவளிக்கவும் முடிந்தது. இன்றைய தேதிக்கு, 38 விண்ணப்பங்களுக்கு இந்த பேஷியோ ப்ராம்ப்ட்டன் திட்டம் மூலமாக ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது.

**அறிஞர் கூற்றுக்கள்**

" தொற்றுநோய் பரவல் காலம் முழுவதுமாக, நமது உள்ளூர் வணிகங்களை ஆதரிக்க எங்களால் முடிந்த அனைத்தையும் நாங்கள் செய்து வருகிறோம்; மேலும் தடுப்புகளின் ஓரத்திலிருந்தபடி பொருட்களை சேகரித்துக்கொள்வதற்கான வாகன நிறுத்த மண்டலங்கள் மூலமாக, வாடிக்கையாளர்கள் தங்களுக்கு பிடித்த உள்ளூர் வணிகத்தில் பொருட்களை பாதுகாப்புடன் பெற்றுச் செல்வது எளிதாகிவிடும். அனைவரும் தொடர்ந்து உள்ளூர் வணிகத்திற்கு ஆதரவளித்து, இந்த சவாலான சமயங்களில் நமது சமூகத்திற்கும் பொருளாதாரத்திற்கும் உதவுவோமாக."

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"கோவிட்-19 தொற்று பரவல் தாக்கங்களின் ஊடாக கடந்து செல்ல, நமது உள்ளூர் வணிகங்களுடன் நமது பொருளாதார ஆதரவு பணிக்குழு நெருங்கிப் பணியாற்றி வருகிறது; மேலும் மாகாணத்தை மீண்டும் திறந்து மீட்சி பெறுவதற்கான 3 ஆம் கட்டத்திற்கு செல்லும்போது நமது வணிக சமூகத்தை ஆதரிப்பதற்கான வழிகளை நாம் தொடர்ந்து தேடுவோம்."

*- பால் விசெண்ட், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5 , பொருளாதார ஆதரவுக்கான பணிப்படை, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“நகரம் முழுவதும் உள்ள எங்கள் உள்ளூர் வணிகங்களுக்கு ஆதரவளிக்க நாங்கள் எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு, தடுப்புகளின் ஓரத்திலிருந்து பொருட்களை சேகரித்துக்கொள்வதற்கான வாகன நிறுத்த மண்டலங்கள் மற்றொரு எடுத்துக்காட்டாகும். இந்த வணிகங்கள் நமது சமூகத்தின் முதுகெலும்பாகும், மற்றும் அவைதான் நமது பொருளாதாரத்தின் ஒருங்கிணைந்த பகுதியாகும். கோவிட்-19 தொற்று பரவலின் தாக்கங்களிலிருந்து நமது நகரத்தை மீட்டெடுக்க முன்னெப்போதையும் விட இப்போது , உள்ளூரை ஆதரிப்பது முக்கியமாகும்.”

*- மைக்கேல் பல்லேஸ்ச்சி, பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 2 & 6; துணைத்தலைமைப் பொறுப்பு, பொருளாதார ஆதரவுக்கான பணிப்படை, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“நகரசபையும் மற்றும் நகர ஊழியர்களும் கோவிட்-19 தொற்று பரவலின் தற்போதைய தாக்கங்களுக்கு பதில் நடவடிக்கை எடுக்கும்போது நமது உள்ளூர் வணிகங்களுக்கு உதவ புதுமையான மற்றும் பாதுகாப்பான வழிகளை தேடியறிந்துள்ளனர். எங்கள் உள்ளூர் வணிக சமூகத்தினர் மற்றும் நகர வளர்ச்சியின் இதர பங்குதாரர்களுடன் தொடர்ந்து ஈடுபடுவதன் மூலம், ப்ராம்ப்ட்டன் நகரினை முழுதுமாக திறந்து மீட்சி பெறச்செய்வதில் உதவுவதற்கான புதிய தீர்வுகளைக் காண நாங்கள் தொடர்ந்து பணியாற்றுவோம்.”

*- டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
*905-874-3426 | Monika.Duggal@brampton.ca*